

# பேராலய ஒலி

## பங்கு மாத இதழ்



ஒலி - 06 டிசம்பர் - 2021 அலை - 12



# பங்குப் பணியாளர்களிடமிருந்து...

**அன்புக்குரியவர்களே,**

வணக்கமும் வாழ்த்தும்! டிசம்பர் மாதம் பிறந்தது, அருள்மிகப் பெற்ற மாதம். மாந்தர் அனைவருக்கும் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் இயேசுவின் பிறப்பின் காலம்.

கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு (Carols) குழுவினர் நமது பகுதிகளுக்கு வரும்போது ஒன்றுகூடி வந்து பாடல்கள் பாடி, மகிழ்ந்து ஆடிக் கொண்டாடுவோம். பங்கிலுள்ள எல்லா வீடுகளுக்கும் அருள்பணியாளர் வந்து செபிப்பார். புதிய ஆண்டுக்கான நாட்காட்டி பெற்று மகிழ்வோம்.

கிறிஸ்து பிறப்பு கால சிறப்பு தயாரிப்பு நிகழ்வுகளிலும் கிறிஸ்துமஸ் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களிலும், திருக்குடும்ப விழா, மாசில்லாக் குழந்தைகள் விழா, புத்தாண்டு நிகழ்வுகள் அனைத்திலும் ஆசையாய் பங்கேற்போம். இயன்றவரை ஏழைகளுக்கு புத்தாடைகள், இனிப்பு, உணவு, பண உதவி கொடுத்து மகிழ்வோம். பகிர்தலே மகிழ்ச்சி. மகிழ்ச்சியே இயேசுவின் பிறப்பு.

டிசம்பர் 24-ம் தேதி நள்ளிரவு கிறிஸ்துமஸ் திருப்பலி நமது ஆயர் மேதகு ச. ஆரோக்கியராஜ் அவர்கள் தலைமையில் நடைபெறும். 01.01.2022 புத்தாண்டு தினத்தன்று காலை 8.30 மணி திருப்பலி நம் ஆயர் அவர்களால் நிறைவேற்றப்படும்.

புதிய பங்குப்பேரவை, புதிய நிதிக்குழு 01.01.2021 அன்று காலை 8.30 மணி திருப்பலியில் வாக்குறுதி கொடுத்து பொறுப்பேற்கும். நமது முந்தைய பங்குப்பேரவை, நிதிக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் பங்கு இறைச்சமூகம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது. இறைவன் அவர்களையும் அவர்களது குடும்பங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பார்.

அகில உலக ஆயர் மாமன்றம் 2021 - 2022 தயாரிப்புப் பணிகள் மறைமாவட்டத்திலும் நமது பங்கிலும் தொடங்கியிருக்கின்றன. இது என்ன என்று தெரிந்து கொண்டு நமது பங்கேற்பையும் பங்களிப்பையும் உறுதி செய்வோம்.

பெய்யென பெய்யும் மழையென நமது வாழ்வில் இறையருள் பொங்கிப் பெருகட்டும்.

உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துகள்.

ஆசியுடன்,

**அருள்திரு. த. சகாயராஜ்,** பங்குப்பணியாளர்

**அருள்திரு. ச. பிரான்சிஸ் செலஸ்டின்,** உதவிப் பங்குப்பணியாளர்

## நவம்பர் மாதத்தில் பங்கில் நிகழ்ந்தவை

- 2-ம் தேதி இறந்த நம்பிக்கையாளர்கள் திருநாள் - அன்று காலை 5.00 மற்றும் 6.30 மணிக்கு பேராலயத்திலும், மாலை 6.30 மணிக்கு கல்லறை தோட்டத்தில் நமது ஆயர் மேதகு ச. ஆரோக்கியராஜ் அவர்கள் தலைமையில் சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது. திருப்பலி நிறைவில் கல்லறைகள் மந்திரிக்கப்பட்டன.
- 7-ம் தேதி பங்கில் மறைபரப்பு ஞாயிற கொண்டாடப்பட்டது. அன்று சிறப்பு காணிக்கை எடுக்கப்பட்டு, மறைபரப்பு பணிக்கென அனுப்பி வைக்கப்பட்டது.
- 12-ம் தேதி மறைக்கல்வி மாணவ, மாணவியருக்கு ஓவியம் மற்றும் திருப்பாடல் மனப்பாடப் போட்டி நடத்தப்பட்டது.
- 20-ம் தேதி பங்குப்பேரவை கூட்டம் மாலை 7.00 மணிக்கு நடைபெற்றது.
- 21-ம் தேதி பங்கில் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. அன்றைய வழிபாட்டை குழந்தைகள் சிறப்பித்தனர். போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கும், வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.
- 22-ம் தேதி முதல் 30-ம் வரை பங்கில் உள்ள அன்பியங்களுக்கான பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுப்பு நடைபெற்றது.
- 24-ம் தேதி நமது பங்கின் கிளைக்கோவிலான, கூனிபஜார், நேமத்தான் தெருவிலுள்ள புனித சவேரியார் கோவிலின் மேற்கூரை (Concrete) அமைக்கப்பட்டது.
- 28-ம் தேதி பாடகர் குழுவின் பாதுகாவலி புனித செசிலியாவின் விழா நமது பங்கில் கொண்டாடப்பட்டது. நமது பங்கைச் சார்ந்த அனைத்து பாடகற் குழுக்களும் அன்றைய திருப்பலியை சிறப்பித்தனர். அனைவருக்கும் அன்பளிப்பும், அன்பு விருந்தும் வழங்கப்பட்டது.

## டிசம்பர் மாதத்தில் பங்கில் நிகழவிருப்பவை

- 5-ம் தேதி நமது மறைமாவட்ட பாதுகாவலி புனித அமல அன்னையின் விழா மறைமாவட்ட விழாவாக, மாலை 5.30 மணிக்கு நமது ஆயர் தலைமையில் திருப்பலியுடன் கொண்டாடப்படும். அன்று ஆங்கிலத்

திருப்பலியும், மரக்கடையிலுள்ள புனித அடைக்கல அன்னை ஆலயத்திலும் திருப்பலி நடைபெறாது.

- 8-ம் தேதி புனித யோசேப்பு ஆண்டு நிறைவு விழா திருப்பலி நடைபெறும். மாலை 5.30 மணிக்கு புனித அன்னாள் இல்லத்தில் சூசையப்பர் நவநாளோடு தேர் பவனி துவங்கி பேராலயத்தில் நிறைவுபெறும். அதனைத் தொடர்ந்து திருப்பலி நடைபெறும்.
- 9 முதல் 20-ம் தேதி வரை கிறிஸ்துமஸ் கேரல்ஸ் நடைபெறும். மக்கள் தங்கள் பகுதிக்கான நாளை தெரிந்து தயாராக இருக்க கேட்டுக் கொள்கிறோம்.
- 19-ம் தேதி காலை 10.30 மணியளவில் நமது பங்கின் பங்குப்பேரவைக்கான தேர்தல் நடைபெறும்.
- 21-ம் தேதி கிறிஸ்துமஸ் சிறப்புச் செயல்பாடாக கிராம சந்திப்பு நடைபெறும்.
- 24-ம் தேதி கிறிஸ்துமஸ் சிறப்பு திருப்பலி நமது மறைமாவட்ட ஆயர் மேதகு. ச. ஆரோக்கியராஜ் அவர்கள் தலைமையில் நள்ளிரவு 11.30 மணிக்கு கிறிஸ்து பிறப்பு இன்னிசை கீதங்களுடன் ஆரம்பமாகும்.
- 25,26-ம் தேதிகளில் குடில் போட்டி நடைபெறும். பங்குபெற விரும்புவோர் தங்களது பெயர்களை டிசம்பர் 22-ம் தேதிக்குள் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும்.
- 26-ம் தேதி திருக்குடும்ப விழா. அன்று மாலை 6.00 மணி திருப்பலிக்குப் பின் குடும்ப விழாக் கொண்டாட்டம் நடைபெறும்.
- 28-ம் தேதி மாசில்லா குழந்தைகள் விழா சிறப்பு திருப்பலியும், போட்டிகளும், கலைநிகழ்வுகளும் நடைபெறும்.
- 29-ம் தேதி அன்பியங்களுக்கான கேரல்ஸ் போட்டி மாலை திருப்பலிக்குப் பின் நடைபெறும்.
- 31-ம் தேதி இரவு 11.00 மணிக்கு புத்தாண்டு சிறப்புத் திருப்பலி, நன்றி கீதங்கள் மற்றும் செபங்களுடன் நடைபெறும்.
- ஜனவரி 1-ம் தேதி காலை 8.30 மணி திருப்பலி நமது ஆயர் அவர்கள் தலைமையில் நிறைவேற்றப்படும்.

# நம்மைத் தேடி வந்த பாலன்




பனி விழும் இரவில்… மனிதர் உறங்கும் வேளையில்
தெய்வ மன்னவன் சத்தமின்றி மண்ணில் வந்தார்
சின்னஞ்சிறு குழந்தை வடிவினில்!

அண்ட சராசங்களையும் படைத்த ஆண்டவர் பிறந்தார்
நாற்றமிகு மாடடைக் குடிலினில்!
தந்தையின் இறைத் திருவுளம் ஏற்று
மனிதரை மீட்க மனிதனாய் உலகில் உதித்தார்!

அனைத்திற்கும் அதிபதியானபோதும்
ஏழ்மையின் கோலம் பூண்டு
பிறந்த இயேசுவின் பிறப்பை
இயற்கையே வியந்துப் போற்றியது.
வானில் ஒளிர்ந்தது புதிய விண்மீன் ஒன்று!

இயேசுவின் பிறப்புச் செய்தியை
மண்ணோர் அறிந்திடச் செய்ய
வான் தூதர் கூட்டம் பூமிக்கு இறங்கி வந்தது.
ஆடு மேய்ப்போருக்கு மாபெரும் நற்செய்தி முழங்கி
ஓசான்னாப் பாடி மகிழ்ந்தது!

பரமனைப் பாமரரும் தேடி வந்தார்;
கற்றறிந்த அறிஞரும் நாடி வந்தார்
குழந்தை வடிவில் வந்தவரை
விண்ணாளும் வேந்தர் என
விசுவாச கண் கொண்டுணர்ந்தார்
நல் மனம் பெற்றோரவரே!

குழந்தை உருவில் இறைவனைக் கண்டார்.
ஆடு மேய்போர் நல் ஆட்டினையும் பாலையும்

நல்லறிஞர் பொன், தூபம், வெள்ளைப் போளம் தந்து
தாழ்ந்தார், பணிந்தார், தெண்டனிட்டார்!

ஓ... மழலை தெய்வமே!
எம்மை மீட்பதற்காய்
உம் மாட்சியை மறைத்து மனிதரானீர்!

உம் பிறப்பு பெருவிழாவன்று...
அழகழகாய் குடில் அமைத்து
வண்ணத் தோரணங்கள் கட்டி
பளபளக்கும் பட்டாடை உடுத்தி
பளீரிடும் ஆபரணங்கள் பல அணிந்து
அன்றொரு நாள் மட்டும் ஆலயம் வருவோம்
குடும்பமாய் - கூட்டமாய்!

ஓ... இயேசு பாலா!
எம் ஆன்மாவின் அசிங்கம் பற்றி
நாங்கள் நினைத்துப் பார்க்க நேரமில்லை.
நீர் எம் இதயம் வந்து பிறந்திட...
உம்மை வரவேற்க...
அதனை அழகுப்படுத்த...
'பாவ மன்னிப்பு' - என்ற அருள்சாதனம்
தேவை என்பதை நாங்கள் உணர்வதேயில்லை!

எங்கள் அன்பு தேவ பாலா!
இப்போது... எங்கள் தவறு புரிகிறது!
ஆம் நன்கு புரிகிறது!
நீர் எம் இதயம் வந்து பிறந்திட
அதனைத் தூய்மையாக்கி,
நற்செயல்களால் அழகுப்படுத்தி
உமக்காகக் காத்திருக்கிறோம்!
வாரும் ஆண்டவரே வாரும்!

ஒவ்வொரு நாளும் எம் இதயம்
நீர் வாழும் குடிலாக வேண்டும்.
தினம் தினம் நற்கருணை வடிவில்
நீர் வந்து பிறக்க வேண்டும்!
வாரும் இயேசுவே வாரும்!

**வி. லீமா ரோஸ்**

# திருவழிபாட்டு நாள்காட்டி

| நாள் | கிழமை | புனிதர்களின் நினைவு | முதல் & இரண்டாம் வாசகங்கள் | நற்செய்தி வாசகம் |
|---|---|---|---|---|
| 1. | புதன் | | எசா 25:6-10a | மத் 15:29-37 |
| 2. | வியாழன் | | எசா 26:1b-6 | மத் 7:21,24-27 |
| 3. | வெள்ளி | புனித பிரான்சிஸ் சவேரியார் | எரே 1:4-8 (அ)<br>1 கொரி 9:16-19, 22-23 | மாற் 16:15-20 |
| 4. | சனி | தமஸ்கு நகர்ப் புனித ஜான் | எசா 30:19-21, 23-26 | மத் 9:35-10; 1, 6-8 |
| 5. | ஞாயிறு | திருவருகைக் காலம் 2வது ஞாயிறு | பாரூ 5:1-9<br>பிலி 1:4-6, 8-11 | லூக் 3:1-6 |
| 6. | திங்கள் | புனித நிக்கோலாஸ் | எசா 35:1-10 | லூக் 5:17-26 |
| 7. | செவ்வாய் | புனித அம்புரோஸ் | எசா 40:1-11 | மத் 18:12-14 |
| 8. | புதன் | புனித கன்னி மரியவின் அமல உற்பவம் | தொநூ 3:9-15, 20<br>எபே 1:3-6, 11-12 | லூக் 1:26-38 |
| 9. | வியாழன் | புனித ஜான் டியேகோ | எசா 41:13-20 | மத் 11:11-15 |
| 10. | வெள்ளி | | எசா 48:17-19 | மத் 11:16-19 |
| 11. | சனி | புனித முதலாம் தமகஸ் | சீஞா 48:1-4,9-11 | மத் 17:10-13 |
| 12. | ஞாயிறு | திருவருகைக் காலம் 3வது ஞாயிறு | செப் 3:14-17<br>பிலி 4:4-7 | லூக் 3:10-18 |
| 13. | திங்கள் | புனித லூசி | எண் 24:2-7, 15-17a | மத் 21:23-27 |
| 14. | செவ்வாய் | சிலுவையின் புனித ஜான் | செப் 3:1-2, 9-13 | மத் 21:28-32 |
| 15. | புதன் | | எசா 45:6b-8, 18, 21b-25 | லூக் 7:19-23 |
| 16. | வியாழன் | | எசா 54:1-10 | லூக் 7:24-30 |
| 17. | வெள்ளி | | தொநூ 49:1-2, 8-10 | மத் 1:1-17 |
| 18. | சனி | | எரே 23:5-8 | மத் 1:18-24 |
| 19. | ஞாயிறு | திருவருகைக் காலம் 4வது ஞாயிறு | மீக் 5:2-5a / எபி 10:5-10 | லூக் 1:39-45 |
| 20. | திங்கள் | | எசா 7:10-14 | லூக் 1:26-38 |
| 21. | செவ்வாய் | புனித பீட்டர் கனிசியுஸ் | இபா 2:8-14 | லூக் 1:39-45 |
| 22. | புதன் | | 1 சாமு 1:24-28 | லூக் 1:46-56 |
| 23. | வியாழன் | கான்டி நகர்ப் புனித ஜான் | மலா 3:1-4; 4:5-6 | லூக் 1:57-66 |
| 24. | வெள்ளி | | 2 சாமு 7:1-5, 8-12, 16 | லூக் 1:67-79 |
| 25. | சனி | கிறிஸ்து பிறப்பு பெருவிழா | எசா 9:2-4, 6-7 / தீத் 2:11-14 | லூக் 2:1-14 |
| 26. | ஞாயிறு | இயேசு, மரிய, யோசேப்பின் திருக்குடும்பம் | 1 சாமு 1:20-22, 24-28<br>1 யோவா 3:1-2, 21-24 | லூக் 2:41-52 |
| 27. | திங்கள் | புனித யோவான் | 1 யோவா 1:1-4 | யோவா 20:2-8 |
| 28. | செவ்வாய் | புனித மாசில்லாக் குழந்தைகள் விழா | 1 யோவா 1:5-2;2 | மத் 2:13-18 |
| 29. | புதன் | புனித தாமஸ் பெக்கட் | 1 யோவா 2:3-11 | லூக் 2:22-35 |
| 30. | வியாழன் | கிறிஸ்து பிறப்புக் காலம் | 1 யோவா 2:12-17 | லூக் 2:36-40 |
| 31. | வெள்ளி | புனித முதலாம் சில்வெஸ்டர் | 1 யோவா 2:18-21 | யோவா 1:1-18 |

# தூய ஆவியாரின் பராமரிப்பில் பயணிக்க...

மூவொரு இறைவனின் மூன்றாம் நபராக கருதப்படுபவர் தூய ஆவியானவர். இந்தத் தூய ஆவியாரின் கொடைகளுள் முதலாவது "ஞானம்". பொதுவாகவே ஞானம் என்பது என்ன? என்ற கேள்வியானது எல்லோருடைய உள்ளத்திலும் இருந்து கொண்டே இருக்கும். மனிதர்களுக்கு மத்தியில் ஞானத்திற்கும், அறிவுக்கும் இடையிலான வேறுபாட்டை அறிந்து கொள்ள இயலாத நிலை தொடர்கிறது. இதனை விளக்கிட மதிப்பிற்குரிய மகான் இராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்கள் கையாண்ட யுத்தியை நானும் பின்பற்றுகின்றேன் ஞானத்தையும், அறிவையும் அறிந்து கொள்வதற்காக ஒரு நிகழ்வை இராமகிருஷ்ண பரமஹம்சர் நம் முன் வைக்கிறார்.

மூன்று நபர்களை தேர்வு செய்து, மூன்று நபர்களையும் ஓரிடத்தில் அமர வைத்துவிட்டு, அவர்களுக்கு எதிரே இருக்கக்கூடிய ஒரு அறைக்குள் சென்ற மூன்று குவளையில் நன்கு காய்ச்சியப் பாலை வைத்து விட்டு வருகிறார். அந்த மூன்று குவளைகளில் ஒன்று தங்கக்குவளை, இரண்டாவது வெள்ளிக் குவளை, மூன்றாவது வெண்கலக் குவளை. பிறகு மூவரையும் பார்த்து ஒருவர் பின் ஒருவராகச் சென்று குவளையில் இருக்கின்ற பாலை அருந்தி வாருங்கள என்கிறார். முதலில் சென்ற நபர் தங்க குவளையில் இருந்து பாலை எடுத்து பருகினார். இரண்டாவதாக அந்த அறைக்குள் சென்றவர், தங்கக் குவளையில் இருந்த பால் தனக்கு கிடைக்கவில்லை என்ற கவலை ஒரு புறம் இருந்தாலும், தங்கத்திற்கு அடுத்தபடியாக விலை மதிப்பாக கருதப்படக்கூடிய வெள்ளிக் கிண்ணத்தில் இருந்த பாலை எடுத்து பருகினார். மூன்றாவதாக அந்த அறைக்குள் சென்றவர், தங்கம், வெள்ளி குவளைகளில் இருந்த பால் தனக்கு கிடைக்கவில்லை என்ற எண்ணம் ஒருபுறம் இருக்க, குவளையில் இருக்கும் பாலை குடித்து வரச் சொன்னதால் வேண்டா வெறுப்போடு வெண்கல குவளையில் இருந்த பாலை அருந்தி விட்டு வந்தார். மூவரையும் இராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்கள் நீங்கள் அந்த அறைக்குள சென்று பாலை அருந்திவிட்டு வரும்போது எப்படி உணர்ந்தீர்கள்? என்று கேட்டார். முதலாம் நபர் சொன்னார், நான் மிகவும் மகிழ்வாக உணர்ந்தேன். காரணம் எனக்கே தங்கக் குவளையில் இருந்த பால் கிடைத்தது என்றார். இரண்டாவது நபர் சொன்னார், எனக்கு சற்று மகிழ்ச்சி குறைவு, இருந்தாலும் வெள்ளிக் கிண்ணத்தில் பால் கிடைத்ததை நினைத்து நான் மகிழ்ந்தேன் என்றார். மூன்றாவது நபர் பேசுவதற்கு முன்பாகவே அழத் தொடங்கி விட்டார். எனக்கு தங்கமும், வெள்ளியும்

கிடைக்கவில்லை. மாறாக வெண்கலக் கிண்ணமே கிடைத்தது. அதிலிருந்த பாலை பருகிவிட்டு வந்தேன் என்றார். அப்போது இராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்கள் மூவரையும் பார்த்துச் சொன்னார், அறையில் வைக்கப்பட்ட குவளைகள் வேறுவேறாக இருந்தாலும், உள்ளிருந்த பாலின் தரமானது ஒன்றாகத்தான் இருந்தது. பாலை குடித்து நீங்கள் நிறைவு கொள்ளவில்லை. மாறாக வெளிப்புற அடையாளமான கிண்ணத்தை எண்ணி, உங்கள் மகிழ்வைத் தொலைத்தீர்கள் என்று கூறி, வெளியே இருக்கின்ற கிண்ணத்தை பார்ப்பது உங்கள் அறிவு. உள்ளுக்குள் இருக்கின்ற பாலின் தன்மையை பார்ப்பது உங்கள் ஞானம் எனக் கற்பித்தார்.

இன்று நாம் வாழுகின்ற சூழலில் நாமும், நமது உறவுகளும், குழந்தைகளும் அறிவோடு மட்டுமல்ல ஞானத்தோடும் வளர வேண்டும். ஞானம் கடவுளிடமிருந்து வருகிறது. தூய ஆவியின் கொடைகளுள் முதன்மையான இந்த ஞானத்தை தான் சாலமோன் சிறுவனாக இருந்தபோது "உம் மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும்" (1 அரசர்கள் 3:9) என்று ஆண்டவரிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொண்டார். இயேசுவும் இம்மண்ணில் வாழ்ந்த போது "ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" (லூக்கா 2:52) என விவிலியம் நமக்கு கற்பிக்கின்றது. நாமும் இம்மண்ணில் ஞானமிக்க மனிதர்களாக வளர வேண்டும் என்பது இறைவன் விரும்புகின்ற ஒன்று. ஆனால், பல நேரங்களில் ஞானத்தை அடைவதில் நாம் ஆர்வமில்லாதவர்களாக இருக்கின்றோம். ஞானத்தைப் பற்றிய புரிதல் அற்றவர்களாக இருக்கின்றோம். இம்மண்ணில் "தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம். எனவே, அந்த ஆவி காட்டும் நெறியிலேயே நடக்க முயலுவோம்" (கலாத்தியர் 5:25) தூய ஆவியின் கொடையான ஞானத்தை நாமும், நமது உறவுகளும் பெற்றுக்கொண்டு வாழ இந்த மாதம் முழுவதும் தூய ஆவியாரின் துணையை நாடுவோம். விவிலியம் கூறுகின்றது. "எல்லா வேண்டல்களையும், மன்றாட்டுகளையும் இறைவனிடம் எழுப்புங்கள். எப்போதும் தூய ஆவியின் துணை கொண்டு வேண்டுதல் செய்யுங்கள். இதில் உறுதியாய் நிலைத்திருந்து, விழிப்பாயிருங்கள் இறைமக்கள் அனைவருக்காகவும் மன்றாடுங்கள்" என்று. இவ்வார்த்தைகளை வாழ்வாக்குவோம்... தூய ஆவியின் துணையோடு ஞானத்தை நமதாக்குவோம்...

என்றும் தூய ஆவியாரோடு பயணிக்க...

**திருத்தொண்டர் ஜே. சகாயராஜ்**

# இல்லத்தில் இயேசு

பனி பொழிவுக்குள் ஒரு முத்தொன்று பிறந்திட,
புது வாழ்வுக்குள் ஒளி தீபத்தை ஏற்றிட
பிறக்கப்போகிறார் நம் வானக மைந்தன் இயேசு

உலகின் மீட்பர் இயேசுவின் பிறந்த தினமே கிறிஸ்துமஸ் திருநாளாக உலகெங்கும் மிகப் பிரமாண்டமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இயேசு கிறிஸ்து பிறந்ததை நினைவுகூரும் வகையில் சுமார் ஒரு மாத காலம் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிற விழாவாகவும், அதே நேரத்தில் உலகின் பெரும்பாலான மக்களால் நினைவு கூரப்படுகிற ஒரு பண்டிகையாகவும் கிறிஸ்துமஸ் திகழ்கிறது. கிறிஸ்துமஸ் கடவுள், மனிதரானதைக் கொண்டாடும் விழா. ஏழ்மையைத் தேர்ந்தெடுத்து, பெத்லகேம் என்னும் சிற்றூரில் எளிமையிலும் எளிமையாக, அதுவும் மாட்டுத்தொழுவத்தில் பிறப்பெடுப்பது என்பது சாதாரண நிகழ்வல்ல. இப்படி ஏழ்மையையும் எளிமையையும் தேர்ந்தெடுத்துப் பிறந்ததால், ஏற்றமிகு வாழ்வுக்கு வழிகாட்டியாக மட்டும் அல்ல ; வழியாகவே வந்ததால்தான் கிறிஸ்துமஸ், ஆனந்தத்துடனும் ஆர்ப்பரிப்புடனும் மிக ஆடம்பரமாகக் கொண்டாடப்படுகிறது.

கடைநிலை மனிதர்களுக்கும் உண்மையான மற்றும் உறுதியான நம்பிக்கைத் தரும் ஓர் அற்புத விழா. 'கடவுள் நம்மோடு' என்ற பொருளுடன் விண்ணிலிருந்து வந்த விடியலாக இயேசு கிறிஸ்துவின் பிறப்பு அமைவதோடு, அனைவருக்கும் நம்பிக்கையூட்டுகிறது.

அப்படிப்பட்ட கிறிஸ்துமஸ் விழா நமக்குச் சொல்லும் செய்தி ஒன்றுதான்... மனிதனே உனக்கான ஒளி தோன்றி உள்ளது. ஆண்டவரின் மாட்சிமை உன் மீது உதித்துள்ளது. எழு, ஒளி வீசு. இதனால்தான், கிறிஸ்து பிறப்புப் பெருவிழா அன்பின் விழாவாகவும், பகிர்வின் விழாவாகும், நம்பிக்கையின் விழாவாகவும், விடுதலையின் விழாவாகவும் உணரப்படுகிறது.

இவ்வாறாக நம் இல்லங்களில் பிறந்து நமக்கு இன்பம் தர இருக்கும் குழந்தை இயேசுவின் பிறப்பினை எதிர்நோக்குவோம். இந்த இக்கட்டான காலகட்டத்திலும் இந்த கிறிஸ்துமஸ் விழாவினை தகுந்த முறையில் கொண்டாடுவோம். இக்கொரோனா காலத்தில் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்த ஏழை குடும்பங்களுடன் குழந்தை இயேசுவின் பிறப்பினை கொண்டாடுவோம். ஏழையின் சிரிப்பில் நம் குழந்தை இயேசுவை நம் இல்லங்களில் காண்போம்.

உங்கள் இல்லத்தில் பாலன் இயேசு பிறந்திட வாழ்த்துக்கள்

**செல்வன். சாம்சன்**

# இயேசுவின் பிறப்பு! நமக்கு வியப்பு!!

கண்ணுறங்கும் நேரத்தில் பிறந்தவர்!
காரிருளை நீக்கப் பிறந்தவர்!
கிறிஸ்தவர்களுக்கு முன்னோடியாகப் பிறந்தவர்!
கீழ்திசையில் விண்மீன் உதிக்கப் பிறந்தவர்!
குடிசையை சொந்தமாக்கிப் பிறந்தவர்!
கூடி வாழ்பவர் உள்ளத்தில் பிறந்தவர்!
கெட்டவர்களை நல்லவர்களாக்கப் பிறந்தவர்!
கேட்பதையெல்லாம் கொடுக்கப் பிறந்தவர்!
கைகள் தட்டி வரவேற்போம் நம் பூபாலனை!
கொடிய மனிதர்களின் மீட்புக்காகப் பிறந்தவர்!
கோமகன்களுக்கெல்லாம் தலைவராகப் பிறந்தவர்!
கௌரவம் பாராமல் மனிதனாக வாழ்ந்து தெய்வமானார்
– நம் இயேசு கிறிஸ்து!

பிறப்போம் பிறப்போம் மனிதனாக!
படைப்போம் படைப்போம் புனிதனாக!
வாழ்வோம் வாழ்வோம் நம் இயேசுவின் சாட்சிகளாக!

உலகில் உதித்த!
உயிருள்ள உன்னதருக்கு!
உணர்வுள்ள உள்ளம்!
கொடுக்கும் அன்பு!
கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்!

**செல்வன். L. அருண்சூர்யா,**
இளையோர் இயக்கம்



# மனிதனின் படைப்பில் நிறைவு கண்ட கடவுள்

வானத்தையும் பூமியையும் கடவுள் படைத்தபோது, பூமி ஒழுங்கில்லாமல் வெறுமையாக இருந்தது எனக் கூறுகிறது விவிலியத்தின் தொடக்க நூல். அந்த வெறுமையைப் போக்கவே கடவுள் ஒளியை உண்டாக்கினார், பூமி முழுவதும் சூழ்ந்திருந்த தண்ணீரை ஒரே பக்கமாக ஒதுக்கி அதைக் கடலாக நிலைநிறுத்தினார். தரையை உண்டாக்கி அதற்கு நிலம் என்று பெயரிட்டார்.

## பூமியை அழகாக்கிய அம்சங்கள்

கடவுள் சொன்ன வார்த்தையின் படியே நிலத்தில் புற்களும் செடிகளும் மரங்களும் அந்தந்த இனத்தின்படியே முளைக்கத் தொடங்கின. செடிகள் விதைகளைத் தந்தன. மரங்கள் விதைகளுள்ள பழங்களைக் கொடுத்தன. கடவுள் மேலும் அற்புதமாகக் கடல் உயிரினங்களையும், நிலத்தில் பறவைகளையும், விலங்குகளையும் உண்டாக்கினார். பூமியை அழகாக்கிய நீர், வெளிச்சம், பசுமை, உயிர்கள் ஆகியவற்றால் பூமிக்கு ஒரு தனி அழகு வந்திருப்பதைக் கடவுள் கண்டார். ஆனாலும், தன் படைப்பில் முழுமையை மேலும் அழகுள்ளதாக அவர் ஆக்க விரும்பியதன் விளைவே, சிந்திக்கும் திறன்கொண்ட **“ஆதாம்”** எனும் ஆதிமகனின் படைப்பு!

## மனிதன் - கடவுளின் சாயல்

கடவுள் உருவத்தில் எப்படி இருப்பார் என்பதற்குப் பெரும்பாலான சமயங்கள் ஏற்றுக் கொண்ட அடிப்படைத் தத்துவமாக இருப்பது மனித சாயல். ஆம்! நம் விவிலியத்தின் தொ.நூ. 1:29, 2:7, ஆகிய வசனங்கள் இக்கூற்றை நிரூபிக்கின்றன. தான் படைத்த மனிதன் தனது சாயலில் மட்டுமே இருக்க வேண்டும் என்று கடவுள் உறுதியாக இருந்தது மனித சமுதாயத்திற்கு மிகப் பெரிய ஆசீர்வாதம்! அது மட்டுமல்ல; பூமியை வழிநடத்தும் தலைவனாகவும் அவனுக்குக் கடவுள் அதிகாரத்தைக் கொடுக்கிறார். அந்த அதிகாரம் மண்ணிலிருந்து கடவுளால் உருவாக்கப்பட்டதால் அவனுக்கு வழங்கப்பட்டது என்கிறார்கள் விவிலிய ஆராய்ச்சியாளர்கள். மேலும் விவிலியத்தின் மூல மொழிகளுள் ஒன்றாகிய எபிரேயத்தில் ‘ஏதாம்’ (Adham) என்று வழங்கப்படும் சொல்லுக்கு ‘மண்ணுக்குரிய மனிதன்’ என்று பொருள் கொள்ளப்படுகிறது.

## ஏதேன் எனும் பரிசு

ஆதாமைப் படைத்த பிறகு பூமியின் கிழக்கே இருந்த ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்து, அவனை அங்கே குடிவைத்தார். அதைப் பண்படுத்தவும் பராமரிக்கவும் சொன்னார். அதோடு, மனிதனுக்கு ஒரு முக்கியமான கட்டளையையும் கொடுத்தார்: “இந்தத் தோட்டத்தில் இருக்கிற எல்லா மரங்களின் பழுங்களையும் நீ திருப்தியாக உண்ணலாம். ஆனால், நன்மை தீமை அறிவதற்கான மரத்தின் பழத்தை மட்டும் நீ சாப்பிடக் கூடாது. அப்படிச் சாப்பிட்டால், அதே நாளில் நீ இறந்து போவாய்” என்று எச்சரித்தார். அவரது எச்சரிக்கையை மனத்தில் நிறுத்தியிருந்த ஆதாமுக்கு, ஏதேன் தோட்டம் பூமியின் சொர்க்கமாக இருந்தது. அங்கே ஆதாமே தலைவன். ஏனெனில், ஏதேன் தோட்டத்தையும் அங்குள்ள அனைத்து உயிர்களையும் அவன் கவனத்துடன் கையாளவும் அவற்றை நேசிக்கவும் கூடிய பண்பை அவன் வளர்த்துக் கொள்கிறானா என்பதைக் காண விரும்பினார் கடவுள். இதற்காகத் தாம் படைத்த எல்லாக் காட்டு விலங்குகள், பறவைகள் உயிரினங்கள் ஆகியவற்றுக்கு ஆதாம் என்ன பெயர் வைப்பான் என்று பார்ப்பதற்காக, அவற்றை அவனிடம் கடவுள் கொண்டு வந்தார். ஒவ்வோர் உயிரினத்துக்கும் முதல் மனிதனாகிய ஆதாம் என்ன பெயர் வைத்தானோ அவையே அவற்றின் பெயர்களாக ஆயின என்று விளக்குகிறது விவிலியம்.

## ஏவாள் எனும் தோழி

கடவுள் எதிர்பார்த்தபடியே அவன் கடவுளின் பிள்ளையாகவும் பூமியின் தலைவனாகவும் இருந்தான். ஆனால், அவனுக்குப் பொருத்தமான ஒரு துணை இல்லை என்பதைக் கடவுள் உணர்ந்தார். அவனுக்கு ஆழ்ந்த தூக்கத்தை வரவழைத்து அவன் தூங்கிக் கொண்டிருந்த நேரத்தில், அவனுடைய விலா எலும்புகளில் ஒன்றை எடுத்த கடவுள், அதிலிருநது ஒரு பெண்ணை உருவாக்கி, அவளை ஆதாமிடம் கொண்டு வந்தார். அவளே ஏவாள். கடவுள் குறிப்பிட்டபடியே அவர்கள் ஒரே உடலாக, கணவனும் மனைவியுமாக இருந்தார்கள். நிர்வாணத்தை உணர முடியாதவர்களாக அவர்கள் இருந்தார்கள். அதனால் அவர்கள் வெட்கப்படவில்லை. ஏவாள் தனக்குத் துணையாக விளங்கியதில் ஆதாம் மகிழ்ந்திருந்தான். தன் தந்தையாகிய கடவுளால் தனக்கு அளிக்கப்பட்டவளை அவன் நம்பினான். ஆனால், சாத்தானால் ஏவாள் ஏமாற்றப்பட்டாள். ஆதாமும் சாத்தானின்

வலைக்குள் சிக்கிக் கொள்ள ஏவாள் காரணமாகிப் போனாள். எதை உண்ணக் கூடாது என்று கடவுள் எச்சரித்திருந்தாரோ அந்த மரத்தின் கனியை உண்ட ஏவாள், அதில் பாதியை ஆதாமையும் உண்ணும்படி செய்தாள். பூமியில் முதல் பாவம், கீழ்ப்படிதல் எனும் கடவுள் தந்த ஞானத்தைப் பொருட்படுத்தாமல் இருவராலும் மீறப்பட்டதால் நிகழ்ந்து போனது. புனிதமான ஏதேனில் கலகக் கறை படிந்தது. ஆதாமையும் அவனுடைய மனைவி ஏவாளையும் தோட்டத்தை விட்டு கடவுள் வெளியேற்றினார். ஆதாமும் ஏவாளும் இழந்தது ஏதேன் எனும் அற்புதத்தை மட்டுமல்ல, கடவுள் தந்திருந்த சாகா வரத்தையும்தான்.

**நம் சிந்தனைக்கு**

1. நம் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே நம்மை அறிந்திருக்கும் நம் இறைவனின் மனிதப் படைப்பின மாண்பை நாம் எந்தளவுக்கு உணர்ந்திருக்கிறோம்?
2. நாம் கடவுளின் சாயல். அவரை பேல் இருக்கும் நாம், அவருக்கு உண்மையுள்ளவர்களாக அவர் கொடுத்த வாழ்வின் கட்டளைகளை முற்றிலும் பின்பற்றுகிறோமா?
3. நமது செயல் அடுத்திருப்பவருக்கு ஏமாற்றம் தருகிறதா? ஒரு காரியத்தில் / செயலில் ஆசைப்படுமுன், நாம் ஏமாற்றம் அடைவோமா? ஏமாற்றப்படுகிறோமா என்பதில் தெளிவுபெறுகிறோமா?
4. நம் நிலையான வாழ்விற்கு, பல எச்சரிக்கைகளை (விவிலியத்தில்) நம் கடவுள் கொடுத்து இருக்கிறார். அவரின் எத்தனை எச்சரிக்கைகளை எத்தனை முறை மீறி இருக்கிறோம்?. இவற்றுக்கெல்லாம் நமக்கு தண்டனை நிச்சயம் உண்டு என்பதையாவது நாம் உணர்ந்திருக்கிறோமா?
5. நம் நெருங்கிய சொந்தமோ, உறவுகளோ, நட்புகளோ, பிறரோ, பாவத்தில் விழ, நாம் காரணராய் இருந்திருக்கிறோமா?

சிந்தித்து இரக்கம் நிறைந்த நம் இறைவனிடம், மனதுருகி, மன்னிப்பு பெற்று இனி இம்மாதிரியான தீய செயல்களை மீண்டும் செய்வதில்லை என்று இறைவனிடத்தில் உறுதி எடுப்போம்.

திருமிகு. **ஜெயந்தி ஜஸ்டின்**

# இறைவாக்குத் தேடல்

(விவிலியப் பகுதி : யோசுவா 13–24)

குறிப்பு :

- ✻ பதிலைத் தனித்தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் கொடுக்கவும், பெயர் அன்பியம், முகவரி குறிப்பிடவும், அதிகாரம் மற்றும் வசனம் குறிப்பிடவும்.
- ✻ பேராலய ஒலி இதழில் இருந்து கேட்கப்படும் கேள்விகளுக்குத் தலைப்பு மற்றும் பக்கம் குறிப்பிட்டு எழுத வேண்டும்.
- ✻ குடும்பத்திற்கு ஒருவர் மட்டுமே பங்கேற்க வேண்டும்.

**விடைகள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் :**
**பிரதி மாதம் 22-ம் தேதிக்குள்**

## I. நிரப்புக.

1. ……. (எந்த) குலத்திற்கு மட்டும் அவர் உடைமை அளிக்கவில்லை.
2. மேற்கு எல்லை பெருங்கடல் ……….. (எந்த) மக்களின் குடும்பங்களைச் சுற்றி அமைந்த எல்லைகள்.
3. இன்றும் கானானியர் ……… (யாரின்) நடுவில் அடிமைகளாக வேலை செய்து வாழ்ந்து வருகின்றனர்.
4. அறியாமல் பிறரைக் கொன்ற எவரும் ……….. வாங்குபவரிடமிருந்து தப்புவதற்கு இவற்றில் அடைக்கலம் புகுவார்.
5. இந்நாள்வரை எவனாலும் ……….. (யாரை) எதிர்த்து நிற்க இயலவில்லை.

## II. சரியா? தவறா?

1. உன் காலடி பட்ட நிலத்தை எல்லாம் உறுதியாகவே உனக்கும் உன் மக்களுக்கும் என்றும் உடைமையாக அளிப்பேன் என்று எனக்கு ஆணையிட்டுக் கூறினார்.
2. எருசலேமில் வாழ்ந்த எபூசியரை யூதா மக்கள் வெளியேற்ற இயலவில்லை.
3. யோசுவா சீலோவில் ஆண்டவர் முன்னிலையில் அவர்களுக்குத் திருவுளச்சீட்டுப் போட்டார்.

4. ஏழாவது சீட்டு நப்தலியின் மக்களின் குலத்தாருக்கு அவர்கள் குடும்பங்களின்படி விழுந்தது.

5. கொலையாளியின் அடைக்கல நகரான எபிரோன்.

## III. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | எலயாசர் | - காலேபு |
| 2. | எபுன்னே | - குரு |
| 3. | பாலா | - மலை |
| 4. | யோர்தான் அருகில் | - செயீர் மலை |
| 5. | ஏசா | - மிகப்பெரிய பலிபீடம் |

## IV. இதழில் தேடவும்

1. அருளாளர் தேவசகாயம், புனிதராக உயர்த்தப்படும் மாதம், ஆண்டு?
2. சாலமோன் இறைவனிடம் கேட்டது?
3. நாம் யாருடைய சாயல்?
4. ஞானம் எங்கிருந்து வருகிறது?
5. நம்பிக்கையை பரப்புவதில் தம்மை ஈடுபடுத்துபவர்கள் யார்?

## சென்ற இதழின் சரியான விடைகள்

**I.** 1. குருக்களின் (3:13), 2. சபிக்கப்படுவான் (6:26), 3. தண்ணீர் (7:5), 4. இஸ்ரேலுக்கு (10:21), 5. அமைதி (11:23)

**II.** 1. தவறு (1:7), 2. சரி (1:8), 3. சரி (8:35), 4. தவறு (10:13), 5. தவறு (12:24)

**III.**

| | |
|---|---|
| 1. ஆக்கோர் | - பள்ளத்தாக்கு (7:26) |
| 2. கிபயோனில் | - கதிரவன் (10:12) |
| 3. சீகோன் | - அரசன் (12:2) |
| 4. அய்யலோன் | - நிலவு (10:12) |
| 5. தோர் | - மன்னன் (12:23) |

**IV.** 1. நவம்பர் 20, (பக். 7), 2. கடவுளே மீட்பர் (பக். 8), 3. 2023 (பக். 13), 4. இரண்டு மைல் (பக். 6), 5. கோமேர் (பக். 8)

## சென்ற மாத இறைவார்த்தைத் தேடல் போட்டியில் பங்கு பெற்றவர்கள்

புனித செபஸ்தியார் அன்பியம் : S. மரிய பியூலா, A. சகாய ஜெயின் ரோஸ், புனித சகாய மாதா அன்பியம் : B. சுமி, புனித அருளானந்தர் அன்பியம் : A. ஹில்டா ரோசாரியோ, புனித பர்னபா அன்பியம் : T. கிறிஸ்டி, புனித ஜஸ்டின் அன்பியம் : D. மரிய சாரதா, புனித மோட்சராக்கினி அன்னை அன்பியம் : O. ஏஞ்சலாராய், S. ரீத்தா டெய்ஸி பாப்பு, புனித லூர்து அன்னை அன்பியம் : R. ஜெயசீலி, B. பொலின், புனித மரியம் தெரசா அன்பியம் : S. ஆரோக்கிய ஜூலியட், புனித அந்தோணியார் அன்பியம் : M.G. வின்ஸி கஸ்பார், X நேவிஸ் சகாயமேரி, புனித வளன் அன்பியம் : J. சகாயமேரி, புனித ஆரோக்கிய அன்னை அன்பியம் : A.T. கிளாடியா இமாகுலேட், L. ஞான ஜோயல், புனித மத்தேயு கபிரியேல் அன்பியம் : ஆ. ஹார்ட்லின்,

**பங்கேற்ற அனைவருக்கும் செபங்களும் வாழ்த்துகளும்!**

## நவம்பர் மாதம் – 2021

### திருமணத்தில் இணைந்தவர்கள்



1. அப்பு - சகாய வித்யா, கெம்ஸ்டவுன்
2. சாலமோன் பிரசன்னா - சிநேகா மரியாள், கெம்ஸ்டவுன்
3. லாரன்ஸ் - ஜெனிபர் ஆல்வின் மேரி, முதலியார் சத்திரம்
4. சாம் அகஸ்டஸ் - மிதுனா, பீமநகர்
5. சகாய ராஜ்குமார் - மது சுதர்ஷினி, முதலியார் சத்திரம்
6. ஆரோக்கியராஜ் - அனித்தா மேரி, கெம்ஸ்டவுன்
7. சாய் பிரசாந்த் - கேத்ரின் மோனிக்கா, கன்டோன்மென்ட்
8. குருஸ் கரன் - தனலெட்சுமி, கெம்ஸ்டவுன்



**இறைமக்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள்**

# திரு அவை செய்திகள்

- நம்பிக்கையை தலைமுறை தலைமுறையாகப் பரப்புவதிலும், அது வளர்வதிலும் தங்களை ஈடுபடுத்திச் செயல்படும் பொதுநிலை மறைக்கல்வி ஆசிரியர்கள், மனஉறுதியுடனும், படைப்பாற்றலுடனும் செயல்பட, அவர்களுக்காக இறைவேண்டல் செய்வோம் என அழைப்பு விடுத்துள்ளார் – திருத்தந்தை பிரான்சிஸ்.

- நம் திறமைகள் நல்ல கனி தரவும், நம் வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்கவும் உதவுவது, நாம் பிறருக்கு ஆற்றும் பணிகளே. பணிபுரிவதற்காக வாழாதவர்கள், இவ்வுலக வாழ்வை முழுமையாக வாழாதவர்கள் என்ற சொற்கள், திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியில் பதிவாகியிருந்தன.

- நம் ஒவ்வொருவரின் இதயத்தையும் உறக்கத்திலிருந்து தட்டியெழுப்பி, வாழ்வில் முக்கியமானதைக் கண்டுகொள்ளவும், எப்போதும் விழிப்புடன் இருக்கவும், இறைவேண்டலில் நிலைத்திருக்கவும், இத்திருவருகைக்காலம் நமக்கு உதவுவதாக என, தன் ஞாயிறு நண்பகல் மூவேளை செப உரையில் எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

- திருத்தந்தை, ஈராக் நாட்டு தலைநகர் மருத்துவமனைக்கு வழங்கிய, மருத்துவ ஆக்சிஜன் தயாரிக்கும் கருவி, நாட்டிலுள்ள பல மருத்துவமனைகளுக்கு உதவி வருகிறது.

- மாற்றுத்திறன் கொண்டோரே, உங்கள் ஒவ்வொருவர் மீதும் தாய் திருஅவை அன்பு கொண்டுள்ளது, திருஅவையின் நற்செய்திப் பணியை நிறைவேற்ற நீங்கள் ஒவ்வொருவரும் தேவை என்ற சொற்களுடன், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மாற்றுத்திறன் கொண்டோர் உலக நாளுக்கென உருவாக்கியுள்ள செய்தி, நவம்பர் 25, அன்று திருப்பீடத்தால் வெளியிடப்பட்டது.

- புனித யோசேப்பு, உலகளாவியத் திருஅவையின் பாதுகாவலராக அறிவிக்கப்பட்டதன் (டிச. 08, 1870) 150ம் ஆண்டின் நிறைவாக திருஅவையில் சிறப்பிக்கப்பட்டு வரும் புனித யோசேப்பு ஆண்டு (டிச. 2020 - டிச. 08, 2021), வருகிற டிசம்பர் 8ம் தேதி நிறைவடைகிறது.

- உலகப் பொருட்களும் உடல் வெளித்தோற்றங்களும் ஒருநாள் மறைந்துபோகும், ஆகவே விசுவாசிகள் அனைவரும் இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு தங்கள் வாழ்க்கையை அமைக்குமாறு அழைப்புவிடுத்தார். திருத்தந்தை பிரான்சிஸ்.

- இந்தியாவில் அருளாளராக வணங்கப்பட்டு வரும் தேவசகாயம் அவர்களை, புனிதராக உயர்த்தும் விழா, 2022-ம் ஆண்டு, மே மாதம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

- சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களை மீட்கச் சென்றவர்கள் என, 51 பேரை பலிவாங்கியுள்ள இரஷ்ய சுரங்க விபத்து குறித்து, தன் ஆழ்ந்த இரங்கலையும், அருகாமையையும் வெளியிட்டு, அந்நாட்டிற்கு செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

- இன்றைய துயர அலைகளுக்கு எதிராக, குறுக்கு வழிகளையும் பொய்முகங்களையும் கைக்கொள்ளாமல், நிமிர்ந்து நின்று செயல்படுமாறு இளையோருக்கு அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்

- 2021 டிசம்பர் 2 முதல் 6 வரை திருத்தந்தை அவர்கள் திருத்தூதுப் பயணமாக சைப்ரஸ், கிரிஸ் நாடுகளுக்குச் செல்ல இருக்கிறார். வரலாறு, கலாச்சாரம் மற்றும் நற்செய்தியால் ஆசிர்வதிக்கப்பட்ட சிறப்பு வாய்ந்த உங்கள் பூமிக்கு வந்த திருத்தூதர்கள் பவுல், பர்னபாஸ் அடிச்சுவடுகளில் மகிழ்ச்சியோடு வருகிறேன் என திருத்தந்தை அறிவித்துள்ளார்.

- தொகுப்பு : திருமிகு. **ஜெயந்தி ஜஸ்டின்**



# இம்மாத அன்பியக் கூட்டங்கள்

| தேதி | அன்பியம் | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 2.12.21 | புனித ஆசீர்வாதப்பர் | மேட்டுத்தெரு |
| 3.12.21 | குழந்தையேசு | வார்னர்ஸ் ரோடு |
| 4.12.21 | புனித சவேரியார் | சவேரியார் ஆலயம், செங்குளம் |
| | புனித மத்தேயு கபிரியேல் | மேலப்புதூர் |
| 6.12.21 | புனித மோட்சராக்கினி மாதா | புனித மோட்சராக்கினி மாதா |
| | ஆலயம், பூந்தோட்டம் | |
| | புனித பிரான்சிஸ் சேவியர் | கெம்ஸ்டவுன் |
| 7.12.21 | புனித ஆரோக்கிய அன்னை | மேலப்புதூர் |
| 8.12.21 | புனித சந்தியாகப்பர் | கெம்ஸ்டவுன் |
| | புனித லூர்தன்னை | காவலர் குடியிருப்பு |
| 9.12.21 | புனித செபஸ்தியார் | புனித செபஸ்தியார் ஆலயம், கெம்ஸ்டவுன் |
| 10.12.21 | புனித மலைமாதா | பிரான்சிஸ் ஹால், கொட்டக்கொல்லத் தெரு |
| 11.12.21 | புனித மரியம் தெரசா | முதலியார் சத்திரம் |
| | புனித அந்தோணியார் | அந்தோணியார் ஆலயம், செங்குளம் |
| 12.12.21 | புனித அடைக்கலமாதா | அடைக்கலமாதா ஆலயம், மரக்கடை |
| 13.12.21 | புனித பர்னபா | ஆர்.சி. காம்பவுண்ட், பூந்தோட்டம் |
| 14.12.21 | புனித அருளானந்தர் | வில்லியம்ஸ் ரோடு |
| | புனித ஜெஸ்டின் | நேமத்தான் தெரு |
| 15.12.21 | புனித சகாயமாதா | இ.பிள்ளையார் கோவில் தெரு |
| 16.12.21 | புனித அந்தோணியார் | மார்சிங்பேட்டை |
| 17.12.21 | திருஇருதய ஆண்டவர் | கண்டித்தெரு |
| 18.12.21 | புனித செபஸ்தியார் | செங்குளம் |
| 19.12.21 | சிறுமலர் | யானைக்கட்டிமைதானம், பீமநகர் |
| 20.12.21 | புனித அடைக்கல மாதா | புனித அடைக்கலமாதா ஆலயம், கூனிபஜார் |
| 21.12.21 | புனித அமலோற்பவ மாதா | காஜாப்பேட்டை |
| 22.12.21 | புனித மரியன்னை | ஜெயில்பேட்டை |
| 23.12.21 | புனித செல்வநாயகி மாதா | புனித செல்வநாயகி மாதா ஆலயம், ஆலம் தெரு |
| 24.12.21 | புனித அன்னை தெரசா | ஒத்தக்கடை |
| 25.12.21 | புனித வளன் | கண்டித்தெரு, பீமநகர் |

## நவம்பர் மாதம் – 2021

### திருமுழுக்கு பெற்ற குழந்தைகள்

| | குழந்தையின் பெயர் | பெற்றோர் பெயர் |
|---|---|---|
| 1. | விதுரன் | அப்பு - சகாய வித்யா |
| 2. | டெலினா ஜெஸ்லின் | லியோ அருள் - திவ்யா பெமினா |
| 3. | ரியான் ஜோசப் சன்ஜீவ் | சன்ஜீவ் சேவியர் ஜோசப் - மோனிக்கா மதன் பால் |
| 4. | தியாஸ் மாதலி | சாமுவேல் ராயன் - எலிசபெத் |
| 5. | செபாஸ்டின் சாரோன் | சாலமோன் பிரசன்னா - சினேகா மரியாள் |
| 6. | லாசன் கபிரியேல் | லாரன்ஸ் ராஜ்குமார் - ஷெரன் பிரீத்தி |
| 7. | அட்ரியேல் ஜெபான் | சகாய ரூபன் - ரம்யா ரோஸ் |
| 8. | செசிலியா மார்கிரெட் | ஆரோக்கிய திவ்யன் - மகேஷ் பிரியா |
| 9. | டொனால்டு டிவோட்டா | குருஸ் கரன் - தனலெட்சுமி |

## கிறிஸ்துமஸ் & புத்தாண்டு திருப்பலி கொண்டாட்டங்கள்




டிசம்பர் 24–25 மற்றும் 31–ஜனவரி 1
ஆகிய தேதிகளில் நடைபெறும் நிகழ்வு

இரவு 11.30 மணி – நள்ளிரவுத் திருப்பலி
காலை 6.30 மணி – திருப்பலி
காலை 8.30 மணி – திருப்பலி
மாலை 6.15 மணி – நற்கருணை ஆசீர்

## இறந்த நம்பிக்கையாளர்கள் திருநாள் - ஆயர் தலைமையில் திருப்பலி





## குழந்தைகளுக்கான போட்டிகள்











## பங்கில் குழந்தைகள் தின விழா கொண்டாட்டம்







## பாடகற் குழுவின் பாதுகாவலி புனித செசிலியாவின் விழா கொண்டாட்டம்



## புனித சவேரியார் கோவில் மேற்கூரை அமைப்பு - நேமத்தான் தெரு





## குழந்தைகள் இல்லம் சந்தித்த பங்கு இளையோரை வாழ்த்துகின்றோம்





## பங்கின் பீடச்சிறாரை வாழ்த்துகின்றோம்

